செய்தி வெளியீடு எண் :25 நாள் :18.12.2020

**தேனி மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் விவசாயிகள் பயிற்சி மையம் மற்றும் கிட்டங்கியினை விவசாயிகளின் பயன்பாட்டிற்கும், பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கும் திறந்து வைத்தார்:-**

*******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தேனி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இன்று (18.12.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் எண்டப்புளி ஊராட்சியில் தோட்டக்கலைத்துறையின் சார்பில் தேசிய வேளான் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி – ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.46.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விவசாயிகள் பயிற்சி மையம் மற்றும் கிட்டங்கியினை விவசாயிகளின் பயன்பாட்டிற்கும், பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கும் திறந்து வைத்து தெரிவித்ததாவது,

மாண்புமிகு அம்மா அவர்களின் தமிழக அரசு நாட்டின் முதன்மைத் தொழிலாகவும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், கிராமப்புற மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாகவும் விளங்குகின்ற வேளாண் தொழிலை மேம்படுத்திடும் வகையில், மண் வளத்தை மேம்படுத்துதல், நவீன உத்திகளை கையாளுதல், விதை, நுண்ணூட்டச் சத்து, உரங்கள் ஆகியவை உரிய நேரத்தில் கிடைக்கச் செய்தல், பயிர்க்கடன் வழங்குதல், நிவாரண உதவித்தொகை, வேளாண் இடுபொருட்கள் வழங்குதல், கடனுதவியுடன் கூடிய மானியத்தொகை தீவிர சாகுபடி முறை, நெல்நடவு இயந்திரங்கள், களை எடுக்கும் கருவிகள் வழங்குதல், கூட்டுப்பண்ணையத் திட்டம் போன்ற பல்வேறு வேளாண் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அரசு தோட்டக்கலைப் பண்ணை, பெரியகுளம் தமிழகத்தில் பழமையான அரசு பண்ணைகளில் முதன்மையானதாகும். இப்பண்ணையில் மா, கொய்யா, சப்போட்டா, பெருநெல்லி போன்ற பழப் பயிர்களின் முக்கிய இரகங்கள் தாய் செடிகளாக நடவு செய்யப்பட்டு, ஒட்டு கட்டுதல், பதியன் முறைகள் மூலம் பயிர் பெருக்கம் செய்யப்பட்டு, தேனி, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட தென் மாவட்ட விவசாயிகளுக்கு தரமான உயர் இரக கன்றுகள் மானிய திட்டங்கள் வாயிலாகவும், நேரடி விற்பனையாகவும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2020-2021 ஆம் நிதியாண்டில் இப்பண்ணையில் பழக் கன்றுகள், வீரிய காய்கறி நாற்றுகள், இதர செடிகள் உற்பத்தி இலக்கு 109.65 இலட்சங்கள் நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 78.9 இலட்சங்கள் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கன்றுகள் உற்பத்தியை தவிர, இப்பண்ணையில் மண்புழு உரம் தயாரிப்பு, தேன் உற்பத்தி, உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி, சாக்லெட் தயாரிப்பு, பழங்கள், காய்கறிகள் பதனீடுதல் போன்ற வேளாண், தோட்டக்கலை சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இப்பண்ணையில் சுமார். ரூ.46.80 இலட்சங்கள் மதிப்பில் 2080 சதுர அடிகள் பரப்பில் விவசாயிகள் பயிற்சி மையம் கட்டப்பட்டப்பட்டுள்ளது. இப்பயிற்சி மையத்தில் பயிற்சி அறை, பயிற்சி சாதனங்கள், சேமிப்பு கிட்டங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டம் மற்றும் இதர திட்டங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் தோட்டக்கலை பயிர்கள் உயர் சாகுபடி தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், அறுபடை பிந்திய மேலாண்மை முறைகள் குறித்த உள்மாவட்ட பயிற்சி, செயல் விளக்கம் மற்றும் கண்டுணர்வு பயணம் இம்மையத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. மேலும், ஓவ்வொரு ஆண்டும் தோட்டக்கலை, வேளாண் துறை சார்ந்த தேனி மற்றும் வெளி மாவட்ட விவசாயிகளுக்கு இம்மையத்தில் தோட்டக்கலை வல்லுநர்களால் அனைத்து விதமான தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது எனவே, விவசாயிகள் இம்மையத்தினை பயன்படுத்தி வாழ்வில் வளம் பெற வேண்டும் என தெரிவித்தார்.

மேலும், தேவதானப்பட்டி பேரூராட்சியில் கூட்டுறவுத்துறையின் சாபில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்க அலுவலக கட்டடத்தினை திறந்து வைத்து, 13 (146 உறுப்பினர்கள்) மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.65.12 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளையும், பயிர்க்கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 6 பயனாளிகளுக்கு ரூ.9.71 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளையும், மத்தியக்காலக்கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ37.60 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளையும் என மொத்தம் 157 பயனாளிகளுக்கு ரூ.1.12 கோடி மதிப்பிலான கடனுதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

காமயகவுண்டன்பட்டி ரூ.8.70 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையக் கட்டடம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் கோகிலாபுரம், சீப்பாலக்கோட்டை, அம்பாசமுத்திரம், தேக்கம்பட்டி, இரங்கசமுத்திரம், வைகை புதூர் (காந்திநகர் காலனி), கோட்டார்பட்டி, ஊஞ்சாம்பட்டி ஆகிய பகுதிகளில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

மேலும், அம்பாசமுத்திரம் ஊராட்சிப் பகுதியில் முல்லை பொரியாறு ஆற்றிலிருந்து இக்கிராம மக்களின் குடிநீர் தேவைக்காக ஜல் சக்தி திட்டத்தின் கீழ் ரூ.71.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 70,000 கொள்ளவு கொண்ட நீர் தேக்க தொட்டி கட்டுமானப்பணியினை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கட்டுமானப்பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர உத்தரவிட்டார். கிராமமக்கள் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வுகளின் போது, தேனி பாராளுமன்ற உறுப்பினர் ப.ரவீந்திரநாத், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், மாவட்ட ஊராட்சித்தலைவர் க.ப்ரிதா, கூட்டுறவுசங்கங்களின் இணைப்பதிவாளர் எம்.ஏகாம்பரம், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் எம்.பாண்டி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.செந்தில்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் எஸ்.கவிதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**